[13th March 1958

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்தப் பிரச்னை சுகாதார மந்திரிகள் மகாநாட்டில் கவனிக்கப்பட்டது. மெடிகல் ஸ்டோர் ஸிலிருந்து மருந்துகளை வாங்குவதுதான் நல்லது என்று அந்த மகா நாட்டில் முடிவு செய்யப்பட்டது. ஏனென்றால், சில சமயங்களில் வெளி யில் மருந்து கிடைக்காத போதுகூட இந்த ஸ்டோர்ஸில் மருந்து கிடைக் கும். இந்த ஸ்டோர்ஸில் குறைந்த விலையிலும் மருந்துகள் கிடைக்கும். ஆனால், சில சமயங்களில் இந்த ஸ்டோர்ஸில் மருந்துகள் அதிக விலை யிலும் விற்கப்படுகிறது. பல விஷயங்களை கவனிக்கும் போது இந்த ஸ்டோர்ஸில் மருந்துகளை வாங்குவது தான் நல்லது. அனேகமாக எல்லா ராஜ்ய மந்திரிகளும் மெடிகல் ஸ்டோர்ஸ் இருக்க வேண்டுமென்றும், அங்கேயிருந்து தான் மருந்துகள் வாங்க வேண்டுமென்றும் ஒத்துக் கொண்டார்கள்.

SRI P. S. SANTHANAM: சட்டமன்ற உறுப்பினர்களுக் காக லெஜிஸ்லேட்டர்ஸ் ஹாஸ்டலில் திறக்கப்பட்டிருக்கும் மருத்துவ விடுதி யில் அவசியமான மருந்துகள் இல்லை என்றும், வெளியிலிருந்து மருந்து களை வாங்குவதற்கு அங்குள்ள மருத்துவ அதிகாரி கட்டளையிடுகிறார் என்றும் தெரிகிறது. இதைத் தடுப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக் குமா?

MR. SPEAKER: மூலக் கேள்வி, வட ஆற்காடு ஜில்லா யிலுள்ள கிராம வைத்திய சாலைகளைப்பற்றியது ஆகும். அங்கத்தினர் சென்னையிலுள்ள ஆஸ்பத்திரியைப் பற்றிக் கேட்கிறார்கள். இதற்கு எப்படி கனம் மந்திரி இப்போது பதில் சொல்ல முடியும்?

SRI V. SANKARAN: கிராம வைத்தியசாலைகளில் இஞ்ஜெக்ஷன் மருந்துகள் வாங்கப்படுவதில்லை என்று கனம் அமைச்சர் தமது பதிலில் கூறினார். இந்த நவீன காலத்தில் இஞ்ஜெக்ஷன் கூடத் தேவை யில்லாமல் அவ்வளவு திடகாத்திரர்களாக கிராம மக்கள் இருக்கிறார் களா? அப்படியில்லாவிட்டால், வேறு ஏதாவது காரணத்தினால் இன்ஜெக்ஷன் மருந்துகள் வாங்கப்படவில்லையா?

THE HON. SRI M. A. MANICKAVELU: இஞ்ஜெக்ஷன் போட்டுக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிற கிராம மக்கள் இஞ்ஜெக்ஷன் மருந்தை வாங்கிக் கொடுத்தால் கிராம வைத்தியசாலைகளிலுள்ள அதி காரிகள் இஞ்செக்ஷன் போடுவார்கள். ஆஸ்பத்திரியிலேயே இஞ்ஜெக்ஷன் மருந்துகளை வாங்கிக் வைத்திருக்கவேண்டியது அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

SRI P. G. MANICKAM: மருந்து சப்ளைக் கடை அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றனவா அல்லது தனிப்பட்டோரால் நடத்தப்படுகின்றனவா?

THE HON. SRI M. A. MANICKAVELU: அவை மத்திய அரசாங் கத்தால் நடத்தப்படுகின்றன.

Government Hospital, Polur

* 307 *Q*.—SRI S. M. ANNAMALAI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a lady doctor is employed in the Polur Government Hospital; and

(*b*) if not, for how long?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir, from 10th January 1958.

(*b*) The post was vacant from May 1956 and it could not be filled up earlier due to dearth of candidates.

13th March 1958]

SRI A. A. RASHEED : Is there any proposal to revive the L.M.P. course for doctors?

MR. SPEAKER : How can the hon. Member ask this question? The present question is about the employment of lady doctor. I disallow the question.

SRI K. VINAYAKAM : What happened to the lady doctor who was holding the post? Why was not suitable arrangement made for the gap that was created after she left the job?

THE HON. SRI M. A. MANICKAVELU : I have no information, Sir, when, she left the job. But somehow the gap took place. Therefore we were trying our best to fill it up. At last we were able to find a medical practitioner.

SRI K. VINAYAKAM : Do the Government take such an unusual time to fill up the lady practitioner's post in a dispensary?

THE HON. SRI M. A. MANICKAVELU : It is very difficult to fill up the gap, Sir.

SRI V. SUBBIAH : தாங்கள் எடுத்துக்கொண்ட ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளிளெல்லாம் லேடி டாக்டர்களைப் போடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எங்கெங்கே லேடி டாக்டர்கள் இல்லையோ அங்கெல்லாம் ஒரு பெண் டாக்டர் நியமிக்கப்படுவார். ஏற்கெனவே ஆண் டாக்டர் ஒருவர் அங்கே இருப்பார். அங்கெல்லாம் ஒரு பெண் டாக்டரும் நியமிக்கப்படுவார். அதற்கான திட்டம் இருக்கிறது. ஆனால், பெண் டாக்டர்கள் கிடைக்காததால் சில இடங்களில் பெண் டாக்டர்களை நியமிக்க முடியவில்லை.

SRI K. RAMASUBBU : கிராம ஆஸ்பத்திரிகளை அமைக்கும்போது, இரண்டு ஏக்கர் நிலமும், டாக்டர் வசிப்பதற்கு வாடகையில்லாத கட்டிடமும் கொடுக்க முன்வரும் கிராமத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டதாக எனக்கு நினைவு இருக்கிறது. எந்த கிராம மக்களாவது இரண்டு ஏக்கர் நிலமும் டாக்டர் வசிப்பதற்கு வாடகையில்லாத கட்டிடமும் கொடுக்க முன் வந்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : மூலக் கேள்வி, போளூரிலுள்ளஆஸ்பத்திரியில் உள்ள லேடி டாக்டர் ஸ்தானத்தைப் பற்றியது ஆகும். கனம் அங்கத்தினர் பொதுப்படையாகக் கேள்வி போடுகிறார். கனம் அங்கத்தினர் பெற விரும்பும் தகவலுக்கு தனிக் கேள்வி போட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

SRI K. SATTANATHA KARAYALAR : பிரசவ ஆஸ்பத்திரிகளிலாவது பெண் டாக்டர்களை நியமிப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ? அரசாங்கத்தார் இந்த ஆஸ்பத்திரிகளிலாவது பெண் டாக்டர்களுக்குப் பதிலாக ஆண் டாக்டர்களைப் போடாமல் இருப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : பிரசவ ஆஸ்பத்திரிகளில் அனேகமாக பெண் டாக்டர்கள் தான் இருக்கிறார்கள். சில சிக்கலான கேஸ்களை ஆண் டாக்டர்கள் கவனிப்பார்கள் (சிரிப்பு.)

SRI K. SATTANATHA KARAYALAR : சமீபகாலம் வரை செங்கோட்டை பிரசவ ஆஸ்பத்திரியில் பெண் டாக்டர் இல்லாமலிருந்தது சர்க்காருக்குத் தெரியுமா ?